# தலைவர்களுக்கும் முதலாளிகளுக்கும் எமர்ஜிங் ஜர்னி ஆசியா வழங்கும் மனநல விழிப்புணர்வுத் திட்டம்

கோலாலம்பூர், அக்.17– தலைவர்களுக்கும் முதலாளிகளுக்கும் எமர்ஜிங் ஜர்னி ஆசியா வழங்கும் மனநல விழிப்புணர்வு திட்டம் அக்டோபர் 18 முதல் 19 வரை காலை 8 மணி முதல் மாலை 4.30 மணி வரை பால்ரூம் 1, சைம் டார்பி கன்வென்ஷன் சென்டரில் நடைபெறவுள்ளது.

நிறுவனத்தின் முதலாளிகள் மற்றும் தலைவர்களின் மனநல நிலைமைகளை மாறுபட்ட முயற்சியில் மேம்படுத்துவதை இலக்காகக் கொண்டு புதிய அணுகுமுறையை அறிமுகப்படுத்துவதில் எமர்ஜிங் ஜர்னி ஆசியா பெருமை கொள்கிறது என தெரிவித்தது. இத்திட்டத்தின் புதிய முயற்சி சர்வதேச இளைஞர் மையம், சர்வதேச பெர்காமா, மலேசிய தொழில் பாதுகாப்பு, சுகாதார பயிற்சியாளர்கள் ஆதரவுடன் கொண்டு வரப்பட்டது.

நிறுவனத்தின் முதலாளிகளுக்கும் தலைவர்களுக்கும் மனநல ஆரோக்கியமும் நல்வாழ்வும் மேம்படுத்தப்படுவதோடு, அவர்களின் வாழ்க்கையில் சிறந்த தாக்கத்தை வெளிப்படுத்துவதற்கும் முதலாளிகளுக்கும் தலைவர்களுக்கும் உளவியல் ஆரோக்கியம் எனும் கருப்பொருளில் மனநல அனுபவ மாநாடு 2.0 (எம்எச்இசி) ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. தனிப்பட்ட அல்லது தொழில்முறை வளர்ச்சியை மேம்படுத்துவதிலும், ஆரோக்கியத்தின் முக்கியத்துவத்தைக் கொடுப்பதிலும் தனியார் நிறுவனத்தின் சுற்றுச்சூழல் அமைப்பின் தலைவர்களை ஊக்குவிக்கவும் இத்திட்டம் வடிவமைக்கப்பட்டுள்ளது.

மலேசியாவில் மன ஆரோக்கியத்தின் பொருளாதார எண்ணிக்கை நாட்டின் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 1 விழுக்காட்டிற்குச் சமமாக ரிம 14.46 பில்லியனாக உயர்ந்துள்ளது. அதோடு, 2021–இல் தற்கொலைகள் 1,142 இருப்பது கவலையளித்தாலும் இந்த எண்ணிக்கை தொடர்ந்து அதிகரித்து வருகிறது. மனநலம் பற்றிய உண்மையான நிலவரத்தையும் அத்துறையில் உள்ள பல பிரச்சினைகளும் கவனிக்கப்படாமல் இருப்பதாக மலேசிய முதலாளிகள் கூட்டமைப்பின் தலைவர் தெரிவித்தார்.

தற்போதைய சூழலில், மன ஆரோக்கியம் பற்றிய கலந்துரையாடல்கள் மிக இரகசியமாக இருக்க வேண்டும் என்ற கண்ணோட்டத்தால் பிறரின் உதவியினை நாடும் முதலாளிகளும் தலைவர்களும் இதனை மறைத்து தங்களுக்குள்ளேயே வைத்துக் கொள்கின்றனர். அவர்களின் திறன்கள், பதவி, தனித்திறமைகளைப் பற்றி மற்றவர்கள் தவறாக கருதுவதோடு, குறைத்து மதிப்பிடுவார்கள் என்ற பயம் அவர்களைப் பிறரிடம் இதனைப் பற்றி உரையாடுவதற்கு ஊக்குவிப்பதில்லை. தொழில்துறைகளில் பெரும்பாலும் 63 விழுக்காடு முதலாளிகளில் 13 விழுக்காடு முதலாளிகள் மட்டுமே தொழிலாளர்களின் நலனில் அக்கறை செலுத்தி நல்வாழ்வை ஊக்குவிக்கின்றனர்.

பணியிடத்தில் தொழிலாளர்கள் மட்டுமல்லாது முதலாளிகள் மற்றும் தலைவர்களின் மனநலம் குறித்து முக்கியத்துவத்தைக் காட்டுவதே எம்எச்இசி 2.0–இன் நோக்கமாகும். தொற்றுநோய் காலத்திற்கு பிறகு, ஒவ்வொரு நிறுவனத்தின் ஊழியர்களின் நல்வாழ்வை வலியுறுத்துவதே முக்கியமாக அமைந்தது. இருப்பினும், முதலாளிகள் மற்றும் தலைவர்கள் எதிர்பார்க்கும் அல்லது தேடப்படும் தகவல்களைப் புரிந்து கொள்ள தவறிவிடுகிறோம்.

வேலையிடத்தில் நல்ல பணிச்சூழலை உருவாக்குவதற்கும் உற்பத்திகளை மேம்படுத்துவதற்கும் முதலாளிகளுக்கும் தலைவர்களுக்கும் விழிப்புணர்வு ஏற்படுத்துவதோடு, மனநலம் சார்ந்த தகவல்களை வழங்கும் என நம்பிக்கை கொண்டுள்ளது.

எம்எச்இசி 2.0 முதலாளிகள் மற்றும் தலைவர்களின் மன ஆரோக்கியத்தை ஆதரிக்க தேவையான அறிவு மற்றும் கருவிகளுடன் அவர்களைச் சரிபடுத்தி மகிழ்ச்சியான, ஆரோக்கியமான மற்றும் அதிக உற்பத்திக்கு வழிவகுக்கும்.

தனிப்பட்ட அல்லது தொழில்முறை அமைப்புகளுக்குள் பல அறிவார்ந்த அமர்வுகள், சிந்தனையைத் தூண்டும் விவாதங்கள், மனநல விழிப்புணர்வு, புரிதல் மற்றும் ஆதரவை மேம்படுத்துவதை நோக்கமாகக் கொண்ட நடவடிக்கைகள் ஆகியவை இத்திட்டத்தில் இடம்பெறுகிறது.

கடந்த 2019 ஆம் ஆண்டு, மனநல அனுபவ மாநாட்டின் ஆதரவாளரும் அந்நிகழ்ச்சியைத் தொடக்கி வைத்த சிறப்பு விருந்தினருமான டத்தோ ஸ்ரீ டாக்டர் டிசுல்கேப்லி இந்த ஆண்டும் அதிகாரப்பூர்வமாகத் தொடக்கி வைப்பதால் இந்நிகழ்ச்சி இன்னும் அதிகமாகப் பயனளிக்கும் என்று உறுதியளிக்கப்படுகிறது.

அதோடு, இரண்டாவது நாள் நிறைவு விழாவை அடாம் அட்லி பின் அப்துல் ஹலிம் அவர்களால் நிறைவு செய்யப்படும்.

இருவரும் மனநலத்தில் சிக்கல்களை எதிர்நோக்கும் தலைவர்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தி அவர்களின் வாழ்க்கையில் மாற்றத்தைக் கொண்டு வருவதே முக்கிய குறிக்கோளாகும்.

இதனைப் பற்றி மேலும் தெரிந்து கொள்ள டாக்டர் சங்கீதா கவுர், +6019–2212229 அல்லது sangeeta.kaur@ejasia.net தொடர்புக் கொள்ளலாம்.




## 400 இந்திய குடும்பங்களுக்கு ஜோம் ஷோப்பிங் வவுச்சர் வழங்கப்படும்

பத்து தீகா தொகுதியில் உள்ள மொத்தம் 400 இந்திய குடும்பங்களுக்கு அடுத்த மாதம் வரவிருக்கும் தீபாவளியை முன்னிட்டு ஜோம் ஷோப்பிங் வவுச்சர் வழங்கப்படும்.

நாளை முதல் செக்ஷன் 16ல் உள்ள அலுவலகத்தில் ரிங்கிட் 200 வவுச்சருக்காக விண்ணப்பிக்கலாம் என்று மக்கள் பிரதிநிதி டேனியல் அல்–ரஷித் ஹரோன் தெரிவித்தார்.

"விண்ணப்பதாரர்கள் அலுவலகத்திற்கு வந்து தேவையான ஆவணங்களை நிரப்பலாம். இந்த ஆண்டு 400 பெறுநர்களுக்கு ஒதுக்கீடு தயாராக உள்ளது. ஆனால் அதிகமானோர் விண்ணப்பித்தால், நாங்கள் மேல்முறையீடு செய்வோம்.

"ஜெயண்ட் கோத்தா கெமுனிங்கில் இந்த வவுச்சர்களைப் பயன்படுத்தலாம். இந்த திட்டம் தீபாவளி கொண்டாட்டத்தை மேலும் உற்சாகப்படுத்தும் என்று நாங்கள் நம்புகிறோம்," என அவர் எஹ்சான் விற்பனையில் சந்தித்தபோது கூறினார்.

ஜோம் ஷோப்பிங் ராயா என்பது மாநில அரசால் அறிமுகப்படுத்தப்பட்ட திட்டமாகும். இது மக்களின் நலன் மற்றும் நல்வாழ்வைக் காக்கும் ஒரு நீண்ட கால திட்டமாகக் குறைந்த வருமானம் பெறும் குழுக்களைக் இலக்காகக் கொண்டது.

பொருளாதார நிலைமை மற்றும் மக்களின் தேவைகளை அடிப்படையாகக் கொண்டு வவுச்சர் மதிப்பு ரிம.100யிலிருந்து ரிம.200 ஆக உயர்த்தப்பட்ட பின்னர் இந்த ஆண்டு வரவு செலவுத் திட்டத்தில் 82,400 பெறுநர்கள் பயன்பெற ரிம.16.48 மில்லியன் ஒதுக்கப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது.



## போர்ப் பயிற்சியில் ஈடுபட்டு வந்த மாணவர் வெப்பத் தாக்குதலால் உயிரிழப்பு

ஜொகூர் பாரு, அக். 17– இராணுவப் போர் பயிற்சி மைய முகாமில் (புலாடா) இளம் அதிகாரிகளுக்கான போர்ப் பயிற்சியில் ஈடுபட்டு வந்த மாணவர், வெப்பத் தாக்குதலால் கடந்த சனிக்கிழமை உயிரிழந்ததாகக் கூறப்படுகிறது.

இங்குள்ள சுல்தான் இஸ்மாயில் மருத்துவமனைக்கு (HSI) 24 வயதான அம்மாணவர் தீவிர சிகிச்சைக்காக அனுப்பப்பட்டதாக ஜொகூரின் உடல்நலம் மற்றும் ஒற்றுமைக் குழுவின் தலைவர் லிங் தியான் சூன் கூறினார்.

அதே நாளில் முகாமின் இலக்கு மைதானத்தில் பயிற்சியில் ஈடுபட்டிருந்தபோது, மாலை 5.30 மணி முதல் 6 மணி வரை நடந்த சம்பவத்தில் 10 மாணவர்கள் ஹீட் ஸ்ட்ரோக் அறிகுறிகளால் பாதிக்கப்பட்டதாகக் கூறப்படுகிறது.

இன்னும் இரண்டு பங்கேற்பாளர்கள் தீவிர சிகிச்சை பிரிவில் சிகிச்சை பெற்று வருகின்றனர், மற்ற ஏழு பேர் கோத்தா திங்கி மருத்துவமனையில் வழக்கமான வார்டில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

ஆனால் அவர்கள் நிலையாக இருப்பதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது என்று அவரை நேற்று தொடர்பு கொண்டபோது கூறினார்.

## மாநிலம் முழுவதும் உள்ள ஆறுகளில் மாசுபாடு பிரச்சினைகள் குறைந்துள்ளன

அம்பாங் ஜெயா, அக். 17– மாநிலம் முழுவதும் உள்ள ஆறுகளில் குறிப்பாகத் தொழில் வளர்ச்சி, மற்றும் விவசாய நடவடிக்கைகளால் ஏற்படும் மாசுபாடுகள் கடந்த மூன்று ஆண்டுகளில் குறைந்துள்ளன.

சம்பந்தப்பட்ட நிறுவனங்களின் தொடர் மாசு கண்காணிப்பின், காரணமாக நீர் சுத்திகரிப்பு நிலையங்கள் (LRA) மூடப்படும் பிரச்சனையும் இக்காலகட்டத்தில் குறைந்துள்ளது என்று சிலாங்கூர் நீர் மேலாண்மை வாரியத்தின் (லுவாஸ்) இயக்குநர் தெரிவித்தார்.

"இந்த வளர்ச்சியின் அடிப்படையில், சிலாங்கூர் முழுவதும் உள்ள 1,025 துணை நதிகளின் நீரின் தரம் மூன்றாம் வகுப்பில் உள்ளது (நல்லது), சுங்கை டாமன்சாரா மற்றும் சுங்கை பூலோ ஆகியவை மிதமான மட்டத்தில் உள்ளன.

"நீரின் தரத்திற்கு ஆபத்தை ஏற்படுத்தக்கூடிய அனைத்து நடவடிக்கைகளையும் நாங்கள் கண்டறிந்து, குறிப்பிட்ட கட்டுப்பாடுகள் மூலம் முன்கூட்டியே நடவடிக்கை எடுக்கிறோம்.

"மேலும், நகராட்சிப் பகுதியிலிருந்து ஆற்றில் உள்ள அனைத்து சங்கமங்களிலும் மாதிரிகள் அவ்வப்போது எடுக்கப்பட்டு, நீரின் தரத்தை ஆராய்கிறோம். ஒவ்வொரு ஆண்டும் நீரின் தரத்தை மேம்படுத்துவதை நோக்கமாகக் கொண்டுள்ளோம்" என்று ஹஸ்ரோல்னிசம் ஷாரி கூறினார்.

சிலாங்கூர் கடல்வழி நுழைவாயில் (SMG) திட்டத்தின் கீழ் தற்போது மேற்கொள்ளப்பட்டு வரும் துப்புரவுப் பணிகளுடன் கிள்ளான் ஆற்றின் செயல்பாட்டை மீட்டெடுக்கும் முயற்சிகளிலும் தனது தரப்பு கவனம் செலுத்துகிறது என்று ஹஸ்ரோல்னிசம் மேலும் கூறினார்.

"ஆற்றில் உள்ள குப்பைகள் அகற்றுவதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன, குறிப்பாகக் கிள்ளான் ஆற்றின் முகத்துவாரம் மற்றும் முடிவில் தொடர்ந்து வருகின்றன.

"கிள்ளான் ஆற்றின் தனித்துவத்தையும் செயல்பாட்டையும் மீட்டெடுக்க நாங்கள் மிகவும் நெருக்கமான அணுகுமுறையை எடுத்து வருகிறோம்," என்று அவர் கூறினார்

## சரவாக், சபாவில் 4,839 ஹெக்டர் நிலத்தில் நெல் சாகுபடி செய்ய அரசு ஒப்புதல்

கோலாலம்பூர், அக். 17–

சபா மற்றும் சரவாக்கில் நெல் சாகுபடிக்காக 4,839 ஹெக்டர் நிலத்தை அரசாங்கம் மேம்படுத்தி வருவதாக நேற்று முன்தினம் நாடாளுமன்றத்தில் தெரிவிக்கப்பட்டது.

சபாவில் 2,159 ஹெக்டர் நிலம், அதாவது பெலுரான் மற்றும் கோத்தா பெலுடில் என்பனவும் சரவாக்கில் 2,680 ஹெக்டர் நிலம் பாடாங் லுபாரில் உள்ளதாகவும் துணைப் பிரதமர் டத்தோஸ்ரீ டாக்டர் அஹ்மட் ஸாஹிட் ஹமிடி கூறினார். "50,000 ஹெக்டர் திட்டம் நீண்ட கால திட்டமாக இருக்க வேண்டும், ஆனால் இதுவரை 4,839 ஹெக்டர் சபா மற்றும் சரவாக்கில் நெல் பயிற்செய்கைக்கு ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது," என்று அவர் கேள்வி பதில் அமர்வின் போது கூறினார். சபா மற்றும் சரவாக்கில் 50,000 ஹெக்டர் பரப்பில் நெற்பயிர்ச்செய்கை திட்டம் தொடர்பாக டத்தோஸ்ரீ முகமட் ஷாஃபி அப்டலின் (Warisan-செம்போர்னா) கேள்விக்கு கிராமப்புற மற்றும் பிராந்திய மேம்பாட்டு அமைச்சராகவும் இருக்கும் அஹ்மட் ஸாஹிட் மேற்கண்டவாறு பதிலளித்தார்.

## பொது சுகாதாரத் துறையை வலுப்படுத்த மாநில அரசு திட்டமிட்டுள்ளது

அடுத்த ஆண்டு பொது சுகாதாரத் துறையை வலுப்படுத்த மாநில அரசு திட்டமிட்டுள்ளது.

மேலும் ஆரம்பக் காலக் கட்டத்திலேயே ஒரு நோயைக் கண்டறிந்து தடுப்பது மிகவும் முக்கியம் என்று பொது சுகாதார எஸ்கோ ஜமாலியா ஜமாலுடின் கூறினார்.

"நான் சிலாங்கூர் யூபென் (பொருளாதார திட்டமிடல் பிரிவு) உடன் விவாதித்தேன், அதாவது தடுப்பு திட்டங்களைச் செயல்படுத்துவது உண்மையில் முக்கியமானது என்று நாங்கள் நினைக்கிறோம்.

"அடுத்த ஆண்டு தடுப்புத் திட்டங்களின் எண்ணிக்கையை அதிகரிக்க உத்தேசித்துள்ளோம். மேலும் நோய்களை ஆரம்ப நிலையிலேயே கண்டறிய சுகாதாரப் பரிசோதனைக்கு உட்படுத்த அதிகமான நபர்களை ஊக்குவிக்கிறோம்," என்று அவர் கூறினார். ஜாலான் பத்து தீகா தேசியப் பள்ளியில் நேற்று நடைபெற்ற சிலாங்கூர் அனாக் சிஹாட் (ஏஏஎஸ்ஏஎஸ்) கார்னிவல் விழாவில் கலந்து கொண்ட பின்னர் அவர் இவ்வாறு கூறினார்.

அடுத்த ஆண்டு மாநில வரவு செலவுத் திட்டம் பற்றி கருத்து தெரிவித்த ஜமாலியா, சுகாதார இலாகாவுக்கான ஒதுக்கீடுகள் சிறந்த முறையில் பயன்படுத்தப்படுவதை தனது தரப்பு உறுதி செய்யும் என்றார். "ஒவ்வொரு எஸ்கோவும் நிச்சயமாக கூடுதல் நிதியை விரும்புகிறோம், ஆனால் அது மந்திரி புசார் டத்தோ' ஸ்ரீ அமிருடின் ஷாரி திட்டமிடும் மேம்பாட்டைப் பொறுத்தது என்றார்.

"இருப்பினும், கூடுதல் நிதி கிடைத்தாலும் அல்லது கிடைக்காவிட்டாலும், பொது சுகாதாரத்தின் அம்சத்திலிருந்து சுகாதார இலாகா அதிக செயல்திறன் கொண்டதாக இருப்பதை நாங்கள் உறுதி செய்வோம்," என்று அவர் கூறினார்.



## கோழிகளை பதப்படுத்தும் சட்டவிரோத தொழிற்சாலைகளில் திடீர் சோதனை



நேற்று முன்தினம் அதிகாலை பத்துமலை வட்டாரத்தில் சட்டவிரோதமாக கோழிகளை பதப்படுத்தும் தொழிற்சாலைகளில் கோலாலம்பூர் மாநகர் மன்ற அதிகாரிகள் திடீர் பரிசோதனை நடத்தியதில் அவை பல்வேறு விதிமுறைகளை மீறியிருப்பது கண்டறியப்பட்டது. நேற்று முன்தினம் அதிகாலை 2 மணியளவில் கோலாலம்பூர் மாநாகர் மன்றத்தின் சுகாதார மற்றும் சுற்றுச் சூழல் துறையின் துணை இயக்குனர் டாக்டர் நோர் ஹலிஷாம் இஸ்மாயில் தலைமையில் நடத்தப்பட்ட இந்த சோதனை நடவடிக்கையில் அந்த தொழிற்சாலைகள் கோழிகளை அறுப்பதற்கான அனுமதி சான்றிதழ் மற்றும் ஹலால் சான்றிதழ்களையும் கொண்டிருக்கவில்லை.

அதோடு அந்த தொழிற்சாலைகள் தூய்மையற்ற நிலையில் செயல்பட்டதோடு டைபாய்ட் தடுப்பூசியை போடாத வெளிநாட்டுத் தொழிலாளர்களை வேலைக்கு வைத்திருந்ததும் தெரியவந்துள்ளது. மேலும் அந்த தொழிற்சாலைகளின் கழிவு நீரும், கோழிகளின் இரத்தங்களும் நேரடியாக பொது கால்வாய் முலம் வெளியேறும் வகையில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்ததால் எட்டு குற்றப் பதிவுகளும் விநியோகிக்கப்பட்டதாக டாக்டர் நோர் ஹலிஷாம் இஸ்மாயில் தெரிவித்தார்.

# சூதாட்ட மைய சோதனைகளில் வெளிநாட்டுப் பெண்கள், திருநங்கைகள் உட்பட 200 பேர் கைது

கோலாலம்பூர், அக். 17–

ஜொகூர் மற்றும் சிலாங்கூரில் உள்ள இரண்டு பொழுதுபோக்கு மையங்களில் நடத்தப்பட்ட சோதனையில் 155 வெளிநாட்டுப் பெண்கள் மற்றும் 6 வெளிநாட்டு திருநங்கைகள் உட்பட மொத்தம் 197 பேர் கைது செய்ப்பட்டனர். இவர்கள் ஒழுக்கக்கேடான செயல்களில் ஈடுபட்டு வந்ததாகக் கூறப்படுகிறது.

ஜொகூர் பாருவில் உள்ள தமா ன் தம்போய் இண்டாவில் உள்ள கிளப்பில் வியாழக்கிழமை (அக். 12) புக்கிட் அமான் சிஐடி–யினர் சூதாட்டம் மற்றும் ரகசியச் சங்கங்கள் தடுப்புப் பிரிவினரால் (டி7) நள்ளிரவு 12.45 மணியளவில் முதல் சோதனை நடத்தப்பட்டதாக புக்கிட் அமான் சிஐடி துணை இயக்குநர் (விசாரணை/சட்டம்) டத்தோ ருஸ்டி முகமட் இசா கூறினார்.

"நாங்கள் 82 தாய்லாந்து பெண்கள், 2 லாவோஸ் நாட்டுப் பெண்கள் , ஒரு வியட்நாமியர் மற்றும் 6 தாய்லாந்து மாற்றுத்திறனாளிகள் அடங்கிய பெண்களை தடுத்து வைத்துள்ளோம்.

அத்தோடு 5 பங்களாதேஷ் ஆண்களையும் மூன்று உள்ளூர் ஆட்களையும், ஒரு மேலாளர் மற்றும் பணியாளர்களையும் நாங்கள் கைது செய்துள்ளோம்" என்று அவர் நேற்று திங்கள்கிழமை (அக். 16) புக்கிட் அமானில் நடந்த செய்தியாளர் கூட்டத்தில் கூறினார்.

"இதில் முதல் கிளப் ஒரு கடையின் நான்காவது மாடியில் இருந்தது என்றும், தினமும் இரவு 8 மணி முதல் அதிகாலை 4 மணி வரை இயங்கியது என்றும் நேரடி இசைக்குழு நிகழ்ச்சிகளை குறித்த கிளப் வழங்கியது மற்றும் ஒரு அறைக்கு ரிம.3,000 விலையில் இரண்டு கரோக்கி அறைகள் அங்கு இருந்தன," என்று அவர் மேலும் கூறினார்.

இரண்டாவது சோதனை சனிக்கிழமை (அக். 14) இரவு சுமார் 11.45 மணியளவில் தாமான் பெரிண்டஸ்ட்ரியன், பூச்சோங்கில் உள்ள ஒரு கிளப்பில் சோதனை செய்து, அங்கு 98 பேரை கைது செய்தனர்.

"அவர்களில் 63 தாய்லாந்து பெண்கள், 6 வியட்நாம் பெண்கள், ஒரு லாவோஸ் பெண் மற்றும் மூன்று தாய்லாந்து ஆண்கள் அடங்கிய 73 பேர் இருந்தனர்," என்று அவர் மேலும் கூறினார்.

மேலும் போதைப்பொருளுக்கு நேர்மறையான பதிலை பதிவுசெய்த மொத்தம் 15 வாடிக்கையாளர்களும் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர் என்று அவர் மேலும் கூறினார்.